dinakani2023@gmail.com

RNI-TNTAM/2023/88253

# நமது தின கனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்

| Vol: 04 | Issue: 069 | 4 Pages | 08.10.2026 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 04 | இதழ்: 069 | 4 பக்கங்கள் | 08.10.2026 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |












**சிற்றின்பம் வெஃகி யறனல்ல செய்யாரே**
**மற்றின்பம் வேண்டு பவர்**

**விளக்கம்:**
அறநெறியால் பெறும் இன்பத்தை விரும்புகின்றவர், நிலையில்லாத சிறிய இன்பத்தை விரும்பி அறம் அல்லாதவற்றைச் செய்யார்.

## ஏஐயால் சில மோசமான விளைவுகள் ஏற்படலாம்: ஓபன் ஏஐ நிறுவனர் சாம் அல்ட்மன் எச்சரிக்கை




செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பத்தால் சில மோசமான விளைவுகள் ஏற்படுவதை உலகம் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கலாம் என்றும், அதே நேரத்தில் அதன் நன்மைகள் மிகப் பெரியதாக இருக்கும் என்றும் ஓபன் ஏஐ நிறுவனத்தின்தலைமைசெயல் அதிகாரி சாம் ஆல்ட்மேன் தெரிவித்துள்ளார்

செய்திநிறுவனம்ஒன்றிற்குஅளித்தபேட்டியில்சாம்ஆல்ட்மேன்கூறியதாவது: தொழில்நுட்பத்தின் நன்மைகளைப் பெறுவதற்காக சில ஆபத்துகளை ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கும் என்று கூறினார். ஏஐ பொதுமக்கள் பரவலாக பயன்படுத்தும் வகையில் வைத்திருப்பதும், அதன் பயன்பாட்டில் மக்களுக்கு சுதந்திரம் இருப்பதும் முக்கியம் . ஏஐ தொழில்நுட்பத்தில் பெரிய அளவிலான ஹேக்கிங், தவறான பயன்பாடு, மோசடி உள்ளிட்ட அனைத்து பிரச்சினைகளையும் முற்றிலும் தடுக்க வேண்டும் என்ற அணுகுமுறையை தான் ஏற்கமாட்டேன். ஏஐ மூலம் ஏற்படும் பாதிப்புகளைவிட, மக்கள் அதைப் பயன்படுத்தி செய்யக்கூடிய நன்மைகள் பல மடங்கு அதிகமாக இருக்கும்" என்றார்.

மேலும், ஏஐ க்கான கட்டுப்பாடுகள் தொடர்பாக ஓபன் ஏஐக்கும் அதன் போட்டி நிறுவனமான ஆந்த்ரோபிக்கும் இடையே கருத்து வேறுபாடு இருப்பதாக ஆல்ட்மேன் தெரிவித்தார். மிகவும் சக்திவாய்ந்த ஏஐ தொழில்நுட்பத்தை ஒரே ஆய்வகத்தின் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது ஏற்றுக்கொள்ள முடியாத அணுகுமுறை . அதே நேரத்தில், ஏஐ மூலம் ஏற்படக்கூடிய மிகப்பெரிய பேரழிவு ஆபத்துகளை ஏற்றுக்கொள்ளக்கூடாது" என்றார்.

## பிரேசில்: முதல் சுற்றில் யாருக்கும் பெரும்பான்மை இல்லை 25ம் தேதி மீண்டும் தேர்தல்



பிரேசிலா, அக். 8

பிரேசில் நாட்டில் அதிபர் தேர்தல் வரும்25ம்தேதிமீண்டும்நடைபெற உள்ளது.

தென் அமெரிக்காவில் அமைந்துள்ள நாடு பிரேசில். இந்நாட்டின் அதிபராக லுலா டி சில்வா செயல்பட்டு வருகிறார்.

இதனிடையே, பிரேசில் நாட்டில் கடந்த 4ம் தேதி அதிபர் தேர்தல் நடைபெற்றது. அதிபர் தேர்தலில் தற்போதைய அதிபர் டி சில்வா, முன்னாள் அதிபர்ஜெய்ர்போல்சனேரோவின்மகன்பிளவியோநண்டெஸ்போல்சனேரோ உள்பட 12 வேட்பாளர்கள் களமிறங்கினர்.

அதிபர் தேர்தலில் வெற்றிபெற வேட்பாளர் 50 சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகளை பெறவேண்டும். எந்த வேட்பாளரும் 50 சதவீதத்திற்குமேல் வாக்குகளை பெறாத பட்சத்தில் அதிக வாக்குகளை பெறும் முதல் 2 வேட்பாளர்கள் மீண்டும் தேர்தலை சந்திக்க வேண்டும். அதன்படி, கடந்த 5ம் தேதி நடைபெற்ற தேர்தலில் யாருக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. தற்போதைய அதிபர் லுலா டி சில்வா 45.16 சதவீதம், பிளவியோ நண்டெஸ் போல்சனேரோ 47.03 சதவீதம் வாக்குகளை பெற்றனர். இதையடுத்து, பிரேசிலில் மீண்டும் அதிபர் தேர்தல் (2ம் கட்டம்) நடைபெற உள்ளது.

இதில் லுலா டி சில்வா மற்றும் பிளவியோ நண்டெஸ் போல்சனேரோ ஆகிய இருவரும் வேட்பாளர்களாக களமிறங்குகின்றனர். வரும் 25ம் தேதி நடைபெறும் இந்த தேர்தலில் வெற்றிபெறும் வேட்பாளர் பிரேசில் அதிபராக தேர்ந்தெடுக்கப்படுவார் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரேசில் அதிபர் தேர்தலில் சுமார் 16 கோடி வாக்காளர்கள் வாக்களிக்க தகுதிபெற்றவர்கள் ஆவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஹெலிகாப்டரில் இருந்து இறங்கும்போது நிலைதடுமாறிய அமெரிக்க துணை ஜனாதிபதியின் மனைவி உஷா



வாஷிங்டன், அக். 8

அமெரிக்க துணை ஜனாதிபதியின் மனைவி உஷா ஹெலிகாப்டரில் இருந்து கீழே இறங்கும்போது நிலைதடுமாறினார்.

அமெரிக்க துணை ஜனாதிபதி ஜேடி வான்ஸ். இவரது மனைவி உஷா. இவர் இந்திய வம்சாவளியை சேர்ந்தவர் ஆவார். மேலும், இந்த தம்பதிக்கு 4 குழந்தைகள் உள்ளன. கடந்த ஜுலை மாதம் உஷாவுக்கு 4வதாக ஆண் குழந்தை பிறந்தது.

இந்நிலையில், ஜேடி வான்ஸ் தனது மனைவி மற்றும் குழந்தைகளுடன் ஹெலிகாப்டரில் மேரிலேண்ட் மாகாணத்திற்கு நேற்று சென்றார். மேரிலெண்ட்டில் உள்ள விமானப்படை தளத்தில் ஹெலிகாப்டர் தரையிறங்கிய நிலையில் ஜேடி வான்சின் மனைவி உஷா பிறந்து சில வாரங்களே ஆன தனது பச்சிளம் குழந்தையுடன் ஹெலிகாப்டரில் இருந்து கீழே இறங்கினார்.

அப்போது எதிர்பாராத விதமாக உஷா நிலைதடுமாறி ஹெலிகாப்டரில் இருந்து கீழே விழ முற்பட்டார். ஆனால், உடனடியாக சுதாரித்துக்கொண்ட உஷா தனது கைக்குழந்தையுடன் கீழே விழாமல் ஹெலிகாப்டரில் இருந்து பத்திரமாக இறங்கினார்.

அதேவேளை, உஷா கைக்குழந்தையுடன் தடுமாறியபோதும் அவரது அருகில் இருந்த பாதுகாப்புப்படை வீரர்கள் யாரும் அவருக்கு உதவாமல் வணக்கம் செலுத்தியவாறு நின்றனர். இது தொடர்பான வீடியோ சமூகவலைதளத்தில் வைரலாகி வருகிறது.

# மாதவரம் பால் பண்ணையில் முதல்அமைச்சர் விஜய் ஆய்வு

சென்னை, க. 8

சென்னை, மாதவரம் ஆவின் பால் பண்ணையில், தினமும் 4 லட்சம் லிட்டர் முதல் 4.5 லட்சம் லிட்டர் வரைபால்உற்பத்திசெய்யப்படுகிறது. இங்கிருந்து, 45க்கும் மேற்பட்ட வழித்தடங்களில், லாரிகள் வாயிலாக சென்னையின் பல்வேறு பகுதிகளுக்கு, பால் பாக்கெட் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது.

தற்போது சென்னையில் ஆவின் பால் குறைவாக வினியோகம் செய்யப்படுவதால் பொதுமக்களுக்கு தேவையான அளவு கிடைக்கவில்லை. கடைகளில் உடனே விற்று தீர்ந்து விடுவதால் பொதுமக்கள் தனியார் பாலை அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டு உள்ளது. ஆவின் பால் கிடைக்காமல் பொதுமக்கள் சிரமப்பட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், சென்னை மாதவரம் பால் பண்ணையில் முதல் அமைச்சர் விஜய் ஆய்வு செய்து வருகிறார். தொடர்ந்து பால் கொள்முதல் மற்றும் விநியோகம் குறித்து அதிகாரிகளிடம் முதல் அமைச்சர் விஜய் விரிவாக கேட்டறிந்தார். தொடர்ந்து ரூ.2.23



கோடியில் கட்டப்பட்டுள்ள ஆவின் மைய ஆய்வக துணை கட்டிடத்தை முதல்அமைச்சர் திறந்து வைத்தார்.

மேலும் மாதவரம் பால்பண்ணை வளாகத்தில் கட்டப்படும் புதிய பண்ணையின் கட்டுமானப் பணிகளை முதல்அமைச்சர் விஜய் ஆய்வு செய்தார். மாதவரம் பால் பண்ணையில் விற்பனைக்காக ஒரு நாளைக்கு 3 முதல் 3.60 லட்சம் லிட்டர் பால் பதப்படுத்தப்படுகிறது. 3.75 ஆயிரம் லிட்டர் பாலை குளிர்விக்கும் அறைகள், 80 மெட்ரிக் டன் பால் பவுடர் இருப்பு அறைகள் உள்ளன.

## தகவல் பெறும் உரிமை சட்டம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு பேரணி




தகவல் பெறும் உரிமை சட்டம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மனைவிகள் பங்கேற்றவிழிப்புணர்வுபேரணி, மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர் கொடியசைத்து துவக்கி வைத்தனர்:.

தகவல் பெறும் உரிமை சட்டம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவிகள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணி மயிலாடுதுறையில் நடைபெற்றது. மயிலாடுதுறை கோட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து துவங்கிய பேரணியை மாவட்ட ஆட்சியர் ஸ்ரீகாந்த் கொடியசைத்து துவக்கி வைத்தார். மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் சினேக பிரியா, மற்றும் அதிகாரிகள் பங்கேற்றனர். நூற்றுக்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் பங்கேற்ற பேரணி முக்கிய வீதிகள் வழியாக ஆட்சியர் அலுவலகம் வரை நடைபெற்றது.

## வாக்காளர்களுக்கு நன்றி



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் தனி சட்டமன்ற இடைத்தேர்தலில் உதயசூரியன்சின்னத்தில் போட்டியிட்ட வழக்கறிஞர் பரந்தாமன் அவர்களுக்கு உதயசூரியன்சின்னத்தில் வாக்களித்த மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி பெருமக்களுக்கு தனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துள்ளார்.

## வாக்காளர்களுக்கு நன்றி



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் தனி சட்டமன்ற இடைத்தேர்தலில் இரட்டை இலை சின்னத்தில்போட்டியிட்ட கனிதாசம்பத்அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்த மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி பொதுமக்களுக்கு தனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துள்ளார்.

## வண்ணாரப்பேட்டையில் 2,000க்கும் மேற்பட்ட கடைகள் அடைப்பு - நடைபாதை ஆக்கிரமிப்பை அகற்ற வலியுறுத்தி வியாபாரிகள் ஆர்ப்பாட்டம்



சென்னை, அக். 8

சென்னை வண்ணாரப்பேட்டை எம்.சி. ரோடு பகுதியில், நடைபாதை ஆக்கிரமிப்புகளை முழுமையாக அகற்ற வலியுறுத்தி கடையடைப்பு மற்றும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

வண்ணாரப்பேட்டை கட்பீஸ் ஜவுளி வியாபாரிகள் சங்கம் சார்பில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், 2,000க்கும் மேற்பட்ட வியாபாரிகள் கடைகளை அடைத்து பங்கேற்றனர்.

சென்னை மாநகராட்சி சார்பில் எம்.சி. ரோடு, சீரோடு மற்றும் ஜேரோடு உள்ளிட்ட பகுதிகளில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சாலை மற்றும் நடைபாதை பணிகள் தற்போது நிறைவடையும் நிலையில் உள்ளன. பொதுமக்கள்தடையின்றிநடந்துசெல்லும் வகையில் அமைக்கப்பட்டுள்ள நடைபாதைகளை மீண்டும் ஆக்கிரமித்து கடைகள் அமைக்கப்படுவதைத் தடுக்க வேண்டும் என வியாபாரிகள் வலியுறுத்தினர்.

மேலும், சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின்படி நடைபாதைகளில் கடைகள் அமைப்பதைத் தடை செய்துள்ள நிலையில், அந்த உத்தரவை முழுமையாக அமல்படுத்த வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

ஸ்மார்ட் சிட்டி திட்டப் பணிகள் கடந்த மூன்று ஆண்டுகளாக நடைபெற்று வந்ததால் தங்களது வியாபாரம் மற்றும் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், தற்போது பணிகள் நிறைவடையும் நிலையில் நடைபாதைகள் மீண்டும் ஆக்கிரமிக்கப்பட்டால், திட்டத்தின் நோக்கமே பாதிக்கப்படும் என்றும் வியாபாரிகள் தெரிவித்தனர்.

வியாபாரிகளின் வாழ்வாதாரம் மற்றும் பொதுமக்களின்நலன்ஆகியஇரண்டையும் கருத்தில் கொண்டு நடைபாதை ஆக்கிரமிப்புகளை முழுமையாக அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தினர்.

ஆர்ப்பாட்டத்தில் சங்கத் தலைவர் அசோக்குமார், செயலாளர் முஹம்மது பாரூக், பொருளாளர் நாகராஜன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இதையடுத்து போலீசார் மற்றும் மாநகராட்சிஅதிகாரிகள்வியாபாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். சுமார் மூன்று மணி நேரம் நடைபெற்ற போராட்டத்திற்குப் பின்னர் வியாபாரிகள் போராட்டத்தை முடித்துக்கொண்டனர். மேலும், கோரிக்கைகள் மீது நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் தொடர் போராட்டங்களில் ஈடுபட முடிவு செய்துள்ளதாக சங்க நிர்வாகிகள் தெரிவித்தனர்.

## எல்.என்.ஜி.யில் இயங்கும் ரெயில் அறிமுகப்படுத்தப்பட்டது ஏன்? - ரெயில்வே அதிகாரிகள் விளக்கம்




சென்னை, அக்.6

மின்மயமாக்கல் 100 சதவீதத்தை நெருங்கிய நிலையில் எல்.என்.ஜி.யில் இயங்கும் ரெயில் அறிமுகப்படுத்தப்பட்டது ஏன்? என்பது குறித்து ரெயில்வே அதிகாரிகள் விளக்கம் அளித்துள்ளனர்.

இரட்டை எரிபொருள்மின்மயமாக்கல் பணிகள் ஏறக்குறைய முழுமையடைந்துள்ள நிலையில், திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு (எல்.என்.ஜி.) மற்றும் டீசல் ஆகிய இரண்டிலும் இயங்கும் புதிய ரெயிலை ரெயில்வே அறிமுகப்படுத்தியது. குஜராத் மாநிலம் சபர்மதி ரெயில் நிலையத்தில் இருந்து 8 பெட்டிகளைக் கொண்ட குளிர்சாதன வசதி இல்லாத இந்த ரெயில் சமீபத்தில் தனது சேவையை தொடங்கியது. இது முற்றிலும் புதிய ரெயில் அல்ல. ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள டீசல், மின்சார ரெயிலில் மாற்றங்கள் செய்யப்பட்டு, இரட்டை எரிபொருளில் இயங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டு உள்ளது. இந்திய ரெயில்வேயில் பெரும்பாலான ரெயில்கள் மின்சார என்ஜின்கள் மூலம் இயக்கப்படுகின்றன. மின்மயமாக்கப்படாத வழித்தடங்களில் டீசல் என்ஜின்கள் பயன்படுத்தப்படுகின்றன. டீசலுக்கு மாற்றாக எல்.என்.ஜி. பயன்படுத்துவதன் மூலம் மாசு வெளியேற்றத்தை குறைக்க முடியும். இதனால், நாடு முழுவதும் ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள டீசல் மின்சார ரெயில்களை எல்.என்.ஜி.யில் இயங்கும் வகையில் படிப்படியாக மாற்றுவதற்கு ரெயில்வே திட்டமிட்டு உள்ளது. தேவை ஏன்? ஆமதாபாத் ரெயில்வே கோட்டத்தில் டீசல் என்ஜினை எல்.என்.ஜி. யில் இயங்கும் வகையில் மேற்கொள்ளப்பட்ட மாற்றத்துக்கு ரூ.1.86 கோடி செலவிடப்பட்டு உள்ளது. ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள ரெயில்களை மாற்றியமைப்பதன் மூலம், புதிய ரெயில்களை வாங்குவதற்கான செலவைக் குறைக்க முடியும். மேலும் ரெயில்களை இரட்டை எரிபொருளில் இயக்குவது, ரெயில்வேயின் எரிபொருள் செலவை குறைப்பதுடன், சுற்றுச்சூழல் பாதிப்பையும் கட்டுப்படுத்துவதற்கு உதவும். இந்திய ரெயில்வேயின் வழித்தடங்களில் 99.6 சதவீதம் மின்மயமாக்கல் பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில், எல்.என்.ஜி. ரெயில்களின் தேவை குறித்து அதிகாரிகள் கூறும்போது, 'மின்மயமாக்கப்படாத வழித்தடங்கள், குறைந்த போக்குவரத்து கொண்ட கிளைப்பாதைகள் மற்றும் மின்சார வசதி இல்லாத பகுதிகளில் எல்.என்.ஜி. ரெயில்களை பயன்படுத்த முடியும். ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள டீசல் என்ஜின்களை உடனடியாக கைவிடாமல், அவற்றை இரட்டை எரிபொருளில் இயக்குவதன் மூலம் எரிபொருள் பயன்பாட்டைக் குறைக்கவும், ரெயில்வே சேவைகளின் செயல்திறனை அதிகரிக்கவும் முடியும் என்றனர்.

# பைக்கில் வந்து ஆடு திருட முயன்ற தந்தை மகனை மடக்கி பிடித்த பொதுமக்கள்



தூத்துக்குடி, அக். 8

தூத்துக்குடி மாவட்டம், புதுக்கோட்டை அருகே உள்ள கூட்டாம்புளி பகுதியில் பட்டப்பகலில் பைக்கில் வந்து ஆடு திருட முயன்ற தந்தைமகனை பொதுமக்கள் கையும் களவுமாகப் பிடித்து போலீசாரிடம் ஒப்படைத்தனர்.

தூத்துக்குடி மாவட்டம், புதுக்கோட்டை அருகே உள்ள கூட்டாம்புளி பகுதியில் மேய்ந்து கொண்டிருந்த ஆடுகளில் ஒரு ஆட்டை, அந்த வழியாக பைக்கில் வந்த 2 பேர் திருடி தங்கள் பைக்கில் ஏற்றிக் கொண்டு, தப்ப முயன்றுள்ளனர். இதை தற்செயலாக கவனித்த அப்பகுதி பொதுமக்கள் உடனடியாக சுதாரித்து செயல்பட்டு, ஆட்டுடன்தப்பிக்க முயன்ற 2 பேரையும் சுற்றிவளைத்துமடக்கிப்பிடித்துதர்மஅடி கொடுத்தனர். அதைத் தொடர்ந்து பிடிபட்ட 2 பேரையும் பொதுமக்கள் புதுக்கோட்டை காவல் நிலைய போலீசாரிடம் ஒப்படைத்தனர்.

இந்த சம்பவம் குறித்து புதுக்கோட்டை போலீசார் வழக்குப்பதிவு செய்து, பிடிபட்ட 2 பேரிடமும் தீவிர விசாரணை நடத்தினர். அதில், அவர்கள் தூத்துக்குடி கணேசன் காலனியைச் சேர்ந்த கணேசன் மகன் ஆரோக்கியஅந்தோணி (வயது 43) மற்றும் அவரது மகன் அந்தோணிமுத்து(20) என்பது தெரியவந்தது. போலீசார் அவர்கள் 2 பேரையும் கைது செய்தனர். மேலும் பொதுமக்கள் தாக்கியதில் காயம் ஏற்பட்டுள்ளதால் 2 பேரும் தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். போலீஸ் பாதுகாப்புடன் அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. பட்டப்பகலில் ஆடு திருட முயன்றதந்தைமகன்பிடிபட்டசம்பவம்அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# சட்டம் ஒழுங்கு சீரழிந்து ரத்த சகதியில் தமிழ்நாடு: மு.க.ஸ்டாலின் கடும் விமர்சனம்



சென்னை, அக். 8

சட்டம்ஒழுங்குசீரழிந்துஇரத்தச்சகதியில் சிக்கியுள்ளதமிழ்நாடு என்றுதிமுகதலைவர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக,திமுகதலைவர்மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது: குற்றவாளிகள் தைரியமாகவும் பொதுமக்கள் அச்சத்தோடும் வாழும் சூழலுக்குத் தமிழ்நாடு தள்ளப்பட்டுள்ளதற்கு சான்றாக கடந்த 24 மணி நேரத்தில் வெளியாகிய அதிர்ச்சிச் செய்திகள் அமைந்துள்ளன.★ சென்னை மயிலாப்பூரில் 19 வயது இளைஞர் சத்தியசீலன் வெட்டி படுகொலை செய்யப்பட்டுள்ளார்.★ திருத்தணியில் தனது 17 வயது மகளுக்குத் தொல்லை கொடுத்த நபர் மீது காவல் நிலையத்தில் புகாரளித்த தந்தை அவரது வீட்டின் முன்பே வைத்து படுகொலை செய்யப்பட்டுள்ளார். காவல் நிலையத்தில் புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்காமல் அலட்சியமாக இருந்ததால் இந்தக் கொலை நிகழ்ந்திருக்கிறது.★ சேலத்தில் வீட்டில் தனியாக இருந்த ஜனாபாய் எனும் மூதாட்டி பகலிலேயே கழுத்து நெரித்து கொலை செய்யப்பட்டிருக்கிறார். கொலையாளிகள் அவரது நகைகளை திருடி சென்றுள்ளனர்.★ திண்டுக்கல் மாவட்டம் சாணார்பட்டி காவல் நிலையத்தில் ஜாமீன் கையெழுத்து போட்டுவிட்டு திரும்பும் போதே வீரபத்திரன் என்பவர் மர்ம நபர்களால் மனைவி முன்பு வைத்து சரமாரியாக வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.★மதுரைமாவட்டம்சமயநல்லூர் அருகே மது போதையில் நிர்வாணமாக்கி வாலிபர் கொலை செய்யப்பட்டுள்ளார்.★ சோழவந்தானில் டாஸ்மாக் கடை அருகே பைக்கில் வந்த சியாம் சுந்தர்ராஜன் வெட்டிப்படுகொலை செய்யப்பட்டுள்ளார்.★ எண்ணூர் இரயில் நிலையத்திலேயே மாணவர்களை வெட்ட முயற்சி நடந்துள்ளது.வடக்கு, தெற்கு, மேற்கு,தலைநகர்எனஎல்லாதிசைகளிலும் குற்றச் சம்பவங்கள் கொடிகட்டி பறக்கின்றன. பட்டப்பகல், நள்ளிரவு எனப்பாகுபாடு இல்லாமல் தமிழ்நாடு ரத்தத்தில் தோய்ந்து போயுள்ளது. வீட்டிலும்பாதுகாப்பில்லை, வெளியிலும் பாதுகாப்பில்லை என்ற நிலையில் மக்கள் பரிதவித்துக் கிடக்கின்றனர்.

காவல்துறையினரால் ரோந்து பணி மேற்கொள்ளப்படுகிறதா இல்லையா?.. சிங்கப்பெண் அதிரடிப்படையினர் ரீல்ஸ் போடுவதில் காட்டும் ஆர்வத்தைப்பெண்களின்பாதுகாப்பில்காட்டுவார்களா மாட்டார்களா?.. காவல் நிலையத்தில் புகாரளித்தும் நடவடிக்கை எடுக்கப்படாமல் புகார் தெரிவித்தவர்களே கொலைக்கு உள்ளாகும் அராஜகத்துக்கு முடிவு எப்போது?.. குற்றவாளிகள் கண்காணிக்கப் படுகிறார்களா இல்லையா? கண்காணிப்பு இல்லாமல் போனதைத்தானே திண்டுக்கல் மாவட்டக் கொலை சம்பவம் காட்டுகிறது?.. தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கு நாளாக, நாளாக மிக மிக ஆபத்தான கட்டத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது.மக்களின்உயிரைக்காப்பதில் கவனம் செலுத்த வேண்டிய முதல்அமைச்சரின் கவனம் மொத்தமும்தனது நாற்காலியைக்காப்பாற்றுவதிலேயே இருக்கிறது. அதற்கான விலையாக அப்பாவி மனித உயிர்கள் பலி கொடுக்கப்பட்டு வருகின்றன. காவல்துறைக்குப் பொறுப்பு வகிக்கும் முதல்அமைச்சர் நிலைமையின் வீரியத்தை உணர வேண்டும். சாக்கு போக்கு சொல்லி தப்பிக்கும் காலம் எல்லாம் கடந்துவிட்டது. *'Take Action' ShootingMode*இல் இருந்து விடுபட்டு, *Please Take Action CM Sir*. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மருத்துவர் வேடத்தில் மாணவியர் விடுதிக்கு சென்று நகைகளை திருடிய பெண்




சென்னை, அக. 8

சென்னையில் மருத்துவர் வேடத்தில் மாணவியர் விடுதிக்கு சென்று நகை திருடிய பெண் கைது செய்யப்பட்டார். நகை திருட்டுசென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் உள்ள மாணவியர் விடுதியில் முதுநிலை மாணவி ஒருவர் தூங்கி கொண்டிருந்தபோது அவரது ஒன்றரை சவரன் தங்க சங்கிலி மற்றும் வைர நகைகள் காணாமல் போயுள்ளன. இதையடுத்து மற்ற மாணவிகளும் தங்களின்அறைகளில்ஆய்வுசெய்தபோதுமொத்தமாக 13 சவரன் தங்க நகைகளும், இரண்டு ஜோடி வைர கம்மலும் திருடப்பட்டது தெரியவந்தது. இதற்கிடையே மருத்துவர் வேடமணிந்து பெண் ஒருவர் மருத்துவமனை வளாகத்தில் சுற்றி திரிந்தார். அவர் மீது சந்தேகமடைந்த மருத்துவர்கள், அவரை மடக்கி பிடித்துள்ளனர். பின்னர் அவரை ஏழுகிணறு காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர். இந்த தகவல் மாணவிகளின் வாட்ஸ் அப் குருப்பில் பகிரப்பட்டது. பின்னர், நகைகளை இழந்த மாணவிகள் காவல் நிலையம் சென்று பார்த்தபோது தங்கள் அறைகளில் திருடப்பட்ட நகைகள் அங்கு இருந்துள்ளன.இது குறித்து அந்த பெண்ணிடம் போலீசார் விசாரணை நடத்தியபோது அவர் சென்னை கிழக்கு தாம்பரத்தை சேர்ந்த சுவேதா என்பது தெரியவந்தது. அவர் மீது பல்வேறு திருட்டு மற்றும் குற்ற வழக்குகள் நிலுவையில் இருப்பதாக போலீசார் தெரிவித்தனர். இது குறித்து விசாரணை செய்தபோது தனது கணவர் மற்றும் தந்தை இறந்துவிட்டதால் பொருளாதார நெருக்கடி காரணமாக இந்த திருட்டில் ஈடுபட்டதாக சுவேதா தெரிவித்தார்.இவருக்கு 2வது திருமணம் ஆன நிலையில் கணவருடன் பெங்களூருவில் வசித்து வருகிறார். கர்ப்பப்பை தொடர்பாக உடல்நல பிரச்சினை இருப்பதால் சிகிச்சைக்காக சென்னை ஸ்டான்லி மருத்துவமனைக்கு வந்துள்ளார். சிகிச்சைக்காக வந்ததை பயன்படுத்தி கொண்டு, மருத்துவர் வேடமணிந்து மாணவியர் விடுதிக்கு சென்று நகைகளை திருடி விட்டு அந்த பணத்தை கிழக்கு தாம்பரத்தில் வசிக்கும் தனது தாயாரின் செலவுக்காக கொடுத்து விட்டு மீண்டும் பெங்களூருவுக்கு செல்ல திட்டமிட்டுள்ளார். மாணவிகளின் நகைகளை திருடிய வழக்கில் சுவேதாவை போலீசார் கைது செய்தனர். மருத்துவர் வேடமணிந்து மாணவியர் விடுதிக்கு சென்று நகையை திருடிய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# பரமக்குடி: காட்டுப்பன்றி தாக்கி சத்துணவு அமைப்பாளர் பலி



ராமநாதபுரம், அக். 8

ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி அருகே காட்டுப்பன்றி தாக்கி சத்துணவு அமைப்பாளர் ஒருவர், சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி அருகே உள்ள அரியனேந்தல்பூங்காநகரைச்சேர்ந்த பெண்காளிமுத்து (வயது 56). இவர் குமரகுடி அங்கன்வாடி மையத்தில் சத்துணவு அமைப்பாளராகப் பணியாற்றி வந்தார். இந்த நிலையில் நேற்று இரவு (செவ்வாய்க்கிழமை) வீட்டின்அருகேஉள்ளவயல்வெளிபகுதிக்குஇயற்கை உபாதைகழிக்க சென்றுள்ளார். அப்போது, அங்கு வந்த காட்டுப்பன்றி ஒன்று திடீரென அவரைத் தொடை மற்றும் முழங்கால் பகுதியில் பயங்கரமாக குத்தித் தாக்கியுள்ளது. இந்த கொடூரத் தாக்குதலில் படுகாயமடைந்த காளிமுத்து, சம்பவ இடத்திலேயே துடிதுடித்து உயிரிழந்தார்.

தகவலறிந்து வந்த போலீசார், அவரது உடலைக் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக பரமக்குடி அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இதுகுறித்து பரமக்குடி தாலுகா போலீசாரும், வனத்துறை அதிகாரிகளும் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இதையடுத்து அப்பகுதியில் நிலவும் காட்டுப்பன்றிகளின் நடமாட்டத்தைக்கட்டுப்படுத்தபொதுமக்கள்அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தென்காசி: 2 குழந்தைகளை எரித்துக்கொன்று தாய் தீக்குளித்து தற்கொலை



தென்காசி, அக். 8

தென்காசி மாவட்டம், சிவகிரி அருகே கோவில் கொடை விழாவில் கணவர் அவதூறாக பேசியதால் 2 குழந்தைகளை எரித்துக்கொன்று தாயும் தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டார்.கோவில் கொடை விழாதென்காசி மாவட்டம், சிவகிரி அருகே உள்ள வடக்குசத்திரம் பகுதியை சேர்ந்த காளிப்பாண்டி (வயது 33), பெயிண்ட் அடிக்கும் தொழிலாளி. இவருக்கும், விருதுநகர் மாவட்டம் தேவதானம் பகுதியைச் சேர்ந்த மாரியம்மாள்(25) என்பவருக்கும் கடந்த 6 ஆண்டுகளுக்கு முன் திருமணம் நடந்தது. அவர்களுக்கு கபினேஷ்வரன்(5), ரபினேஷ்வரன்(4) ஆகிய 2 மகன்கள் உண்டு. இதில் கபினேஷ்வரன் 1ம் வகுப்பும், ரபினேஷ்வரன் அங்கன்வாடிக்கும் சென்று வந்தனர்.காளிப்பாண்டிக்கு மதுகுடிக்கும் பழக்கம் இருந்து வந்ததாகவும், இதனால் கணவன்மனைவி இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்ததாகவும் கூறப்படுகிறது. அந்த பகுதியில் உள்ள ஒரு கோவிலில் கொடை விழா நடந்து வருகிறது. நேற்று முன்தினம் இரவில்மாரியம்மாள்தனது2மகன்களுடன்விழாவுக்கு சென்றார். அங்கு அவர் பெண்களுடன் கும்மியடித்துக் கொண்டு இருந்தார்.தீக்குளிப்புஅப்போது அங்கு மதுபோதையில் வந்த காளிப்பாண்டி தனது மனைவியை அவதூறாக பேசியதாக கூறப்படுகிறது. இதனால் மனவேதனை அடைந்த மாரியம்மாள் தனது 2 மகன்களையும் அழைத்து கொண்டு வீட்டிற்கு வந்தார். பின்னர் வீட்டில் இருந்த மண்எண்ணெயை 2 மகன்கள் மீதும், தன் மீதும் ஊற்றி தீவைத்துக் கொண்டார். அவர்களின் அலறல் சத்தம் கேட்டு அக்கம்பக்கத்தினர் அங்கு ஓடிவந்து தண்ணீரை ஊற்றி தீயை அணைத்தனர்.இதில் உடல் கருகி பலத்த காயம் அடைந்த மாரியம்மாள் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக துடிதுடித்து இறந்தார். 2 குழந்தைகளும் உடல்கருகியநிலையில்உயிருக்குபோராடிக்கொண்டு இருந்தது. அவர்களை மீட்டு சிகிச்சைக்காக அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர். அங்கு சிகிச்சை பலனின்றி நேற்று காலையில் கபினேஷ்வரன், ரபினேஷ்வரன் ஆகிய 2 பேரும் பரிதாபமாக உயிரிழந்தனர்.

# கொலை வழக்குகளில் சிறப்பாக பணியாற்றிய போலீசாருக்கு திருநெல்வேலி சரக டி.ஐ.ஜி. பாராட்டு




தூத்துக்குடி, அக். 8

தூத்துக்குடியில் 2 கொலை வழக்குகளில் சிறப்பாக பணியாற்றிய தலைமை காவலர்களை சரக அலுவலகத்துக்கு நேரில்அழைத்து திருநெல்வேலி சரக டி.ஐ.ஜி. சான்றிதழ்கள் வழங்கி பாராட்டினார். கொலை வழக்கில் சிறப்பான நீதிமன்ற பணிகள்தூத்துக்குடி மாவட்டம், தெற்கு காவல் நிலைய கொலை வழக்கின் நீதிமன்றப் பணிகளில் உரிய ஆவணங்கள்மற்றும்ஆதாரங்களை ஒருங்கிணைத்து, குற்றவாளிக்கு தண்டனை பெற்றுத்தரும் பணியில் தலைமை காவலர் கணபதிஅம்மாள்முக்கியபங்காற்றினார்.இதேபோல் தூத்துக்குடி மாவட்டம், முத்தையாபுரம் காவல் நிலைய கொலை வழக்கின் நீதிமன்றப் பணிகளில் உரிய ஆவணங்கள் மற்றும் ஆதாரங்களைஒருங்கிணைத்து, குற்றவாளிக்கு தண்டனை பெற்றுத்தரும் பணியில் தலைமைக் காவலர் கணேசன் முக்கியப் பங்காற்றினார். தலைமை காவலர்களுக்கு திருநெல்வேலி சரக டி.ஐ.ஜி. பாராட்டு மேற்சொன்ன இரண்டு தலைமை காவலர்களையும் நேற்று திருநெல்வேலி சரக டி.ஐ.ஜி. திருநாவுக்கரசு, சரகஅலுவலகத்திற்கு நேரில்அழைத்து அவர்களின்சிறப்பானபணியைப்பாராட்டி, பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கி கவுரவித்தார்.

# பழனியில் ரூ.100 கோடி மதிப்பிலான நில மோசடி வழக்கு: மேலும் 2 பேரை கைது செய்த சி.பி.சி.ஐ.டி.



பழனி, அக். 8

பழனியில், தண்டபாணி சுவாமி மடத்துக்கு சொந்தமாக ரூ.100 கோடி மதிப்பிலான நிலம் இருக்கிறது. அந்த நிலம் 2 பேருக்கு மோசடியாக பத்திரப்பதிவு செய்யப்பட்டது. இது குறித்து திண்டுக்கல்சி.பி.சி.ஐ.டி.போலீசார் வழக்குப்பதிவு செய்து, 100க்கும் மேற்பட்டோரிடம் விசாரித்தனர். அதோடு பல்வேறு இடங்களில் சோதனை நடத்தி ஆவணங்களை கைப்பற்றினர். அதையடுத்து திண்டுக்கல்லை சேர்ந்த சார்பதிவாளர் ஜஸ்டின் மணிகண்டன், விழுப்புரத்தை சேர்ந்த ஆசிரியர் முருகதாஸ், நிலத்தை வாங்கிய திருப்பூர் பாப்பன்குளம் வெள்ளத்துரை, பழனியை சேர்ந்த சேதுபதி மற்றும் வக்கீல் அன்வர்தீன், ஒட்டன்சத்திரத்தை சேர்ந்த பத்திர எழுத்தர் ஜெயபிரகாஷ் ஆகிய 6 பேர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.தலைமறைவுஇதில் வக்கீல் அன்வர்தீன் மதுரை மத்திய சிறையிலேயே உயிரிழந்தார். மற்ற 5 பேரும் மதுரை சிறையில் உள்ளனர்.இவர்கள்ஜாமீன்கேட்டுஅளித்தமனுக்களை திண்டுக்கல் நீதிமன்றம் தள்ளுபடி செய்த நிலையில் சுப்ரீம்கோர்ட்டும் தள்ளுபடி செய்தது. ஒட்டன்சத்திரத்தைச் சேர்ந்த பத்திர எழுத்தர் ஜெயப்பிரகாசை சி.பி.சி.ஐ.டி. போலீசார் 2 நாட்கள் காவலில் எடுத்து விசாரித்த நிலையில் எவ்வித தகவலும் கிடைக்காததால் அதிர்ச்சியடைந்தனர். அவரது வீட்டில் இருந்த கணினி, ஹார்டுடிஸ்க் ஆகியவற்றை கைப்பற்றி வேறு யாருக்கேனும் தொடர்பு உள்ளதா என ஆய்வு மேற்கொண்டு வந்தனர். இவ்வழக்கில் மேலும் ஒரு பத்திர எழுத்தர் சிவக்குமார் உள்பட 5 பேர் தலைமறைவாக உள்ள நிலையில் அவர்கள் குறித்து எந்த தகவலும் கிடைக்காததால் கடந்த 2 மாதமாக சி.பி.சி.ஐ.டி. போலீசார் திணறி வந்தனர். குற்றப்பத்திரிகைஇந்த மோசடி வழக்கில் மூளையாக செயல்பட்ட முக்கிய புள்ளி குறித்தும் இதற்கு பின்புலத்தில் இருந்த மற்ற நபர்கள் குறித்தும் துப்பு கிடைக்கவில்லை.முக்கியகுற்றவாளிகள்அனைவரும் கைது செய்யப்பட்டு விட்டதால் இதுவரை நடத்திய விசாரணை அடிப்படையில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய போலீசார் திட்டமிட்டிருந்தனர்.தற்போது சிறையில் உள்ளவர்களின் குடும்பத்தினர் நடமாட்டம் சி.பி.சி.ஐ.டி.போலீசாரின்கண்காணிப்புவளையத்தில் இருந்து வந்தது. அவர்களது செல்போன், வாட்ஸ்அப் உரையாடல்கள் சமூக வலைதளப்பதிவுகள், வங்கி, டிஜிட்டல் பணப்பரிவர்த்தனைகள் ஆகியவற்றையும் கண்காணித்து வந்தனர்.இந்நிலையில் பழனியில் ரூ.100 கோடி மதிப்பிலான நில மோசடி வழக்கில் மேலும் 2 பேரை சி.பி.சி.ஐ.டி. போலீசார் கைது செய்துள்ளனர். இதன்படி சார்பதிவாளர் அலுவலக இளைநிலை உதவியாளர் சிவசங்கரி மற்றும் இடைத்தரகர் ஜெயபிரகாசுக்கு உடந்தையாக செயல்பட்டதாகவழக்கறிஞர்சிவக்குமார்ஆகியோரை சி.பி.சி.ஐ.டி. போலீசார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த தொழிலாளிக்கு 5 ஆண்டு சிறை: ஈரோடு மகளிர் கோர்ட்டு தீர்ப்பு

ஈரோடு, அக். 8

சிறுமிக்குபாலியல்தொல்லைகொடுத்ததொழிலாளிக்கு 5 ஆண்டு சிறை தண்டனை விதித்து ஈரோடு மகளிர் கோர்ட்டு தீர்ப்பு அளித்தது.பாலியல் தொல்லைகோபிசெட்டிபாளையம் அருகே சிறுவலூர் அயலூரை சேர்ந்தவர் வேலன் (வயது 49). கூலித் தொழிலாளி. இவர் கடந்த ஆண்டு ஜூன் மாதம் 30ந் தேதி சிறுவலூர்பகுதியில்நின்று கொண்டு இருந்தார். அப்போது பஸ்சில்இருந்துஇறங்கிவீட்டுக்குநடந்துசென்றுகொண்டு இருந்த 9 வயது சிறுமியின் கையை பிடித்து இழுத்து வேலன் பாலியல் தொல்லை கொடுத்து உள்ளார். இதுகுறித்துசிறுமியின்பெற்றோர்கொடுத்தபுகாரின்பேரில் கோபி அனைத்து மகளிர் போலீசார் போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து வேலனை கைது செய்தனர். மேலும், அவர் மீது ஈரோடு மகளிர் கோர்ட்டில் போலீசார் வழக்கு தொடர்ந்தனர்.சிறைஇந்த வழக்கை விசாரித்து வந்த நீதிபதி சொர்ணகுமார் நேற்று தீர்ப்பு கூறினார். அதில், சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த குற்றத்துக்காக வேலனுக்கு 5 ஆண்டு சிறை தண்டனையும், ரூ.5 ஆயிரம் அபராதமும் விதித்து தீர்ப்பு அளித்தார். மேலும், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ரூ.1 லட்சம் இழப்பீட்டு தொகை வழங்க தமிழக அரசுக்கு பரிந்துரை செய்தார்

# மேற்கு வங்காளத்தில் இருந்து சென்னைக்கு கஞ்சா கடத்தி வந்த 2 பேர் கைது




சென்னை, அக. 8

சென்னை செங்குன்றம் அருகே ஆர்டிஓ அருகே வாகன சோதனைமேற்கு வங்காளத்திலிருந்து சென்னைக்கு கஞ்சா கடத்துவதாக செங்குன்றம் போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.இதையடுத்துஇன்று(புதன்கிழமை),சென்னை ஆவடி மாநகர காவல் எல்லைக்குட்பட்ட செங்குன்றம் வட்டார போக்குவரத்து அலுவலகம் (ஆர்டிஓ) அருகே போலீசார் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போதுஅங்குசந்தேகத்திற்குஇடமளிக்கும்வகையில் வந்த 2 பேரைப்பிடித்துபோலீசார்சோதனைநடத்தினர்.22 கிலோ கஞ்சா பறிமுதல் கைதுஅவர்கள் வைத்திருந்த பைகளைசோதனையிட்டபோது, அதில்சட்டவிரோதமாக கடத்தி வரப்பட்ட 22 கிலோ கஞ்சா இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, கஞ்சாவை பறிமுதல்செய்தபோலீசார், கடத்தலில்ஈடுபட்ட சென்னை செங்குன்றம் அடுத்த ஆட்டந்தாங்கல் பகுதியைச் சேர்ந்த மணிகண்டன், மற்றும்பூவிருந்தவல்லியைச் சேர்ந்த ஸ்ரீதர் ஆகியோரை உடனடியாககைதுசெய்தனர். போலீசார் விசாரணைபோலீசாரின் முதற்கட்ட விசாரணையில், இவர்கள் 2 பேரும் மேற்கு வங்காள மாநிலத்திலிருந்து சென்னைக்குஇந்தகஞ்சாவைகடத்திவந்ததுதெரியவந்தது. மேலும், சென்னையின் பல்வேறு பகுதிகளிலுள்ள சில்லறை வியாபாரிகளுக்கு விநியோகம் செய்வதற்காக இந்த கஞ்சாவை கடத்தி வந்துள்ளனர். இந்த கடத்தலின் பின்னணியில் உள்ள முக்கிய புள்ளிகள் மற்றும் சர்வதேச நெட்வொர்க்குறித்துசெங்குன்றம்போலீசார்வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தஞ்சாவூரில் தனியார் பஸ்களில் டிக்கெட் கட்டணம் உயர்வு: பொதுமக்கள் அதிர்ச்சி



தஞ்சாவூர், அக். 8

தஞ்சை பட்டுக்கோட்டை வழித்தடத்தில் தனியார் பஸ்களில் டிக்கெட் கட்டணம் உயர்ந்துள்ளதால் பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். தனியார் பஸ்கள்தமிழகத்தில் பொதுமக்களின் சேவைக்காக அரசு பஸ்களும், தனியார் பஸ்களும் இயக்கப்பட்டு வருகின்றன. கடந்த 2018ம் ஆண்டுக்கு பின்னர் தனியார் பஸ்களின் கட்டணம் மாற்றி அமைக்கப்படவில்லை. டீசல் விலை உயர்வுக்கு ஏற்ப பயணிகளுக்கான பஸ் கட்டணத்தை உயர்த்த கோரி தனியார் பஸ் உரிமையாளர்கள் தமிழகஅரசுக்கு கோரிக்கை மனு அளித்தனர்.அந்த மனுவை ஏற்று கடந்த ஆண்டு தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தினருடன் ஆலோசனை நடத்திய போக்குவரத்துத்துறை அதிகாரிகள், அது தொடர்பான கருத்துக்களை பெற்றனர். ஆனால் அதன்பிறகு தற்போது வரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லைஎனகூறிதனியார்பஸ்உரிமையாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது.இந்த வழக்கு நடை பெற்று வருகிறது.

இதற்கிடையில் சில தனியார் பஸ்களில் தன்னிச்சையாக டிக்கெட் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. வெற்றி பயண திட்டம்தஞ்சை மாவட்டத்தில் அதிக அளவில் தனியார் மற்றும் அரசு பஸ்கள் பட்டுக் கோட்டை வழித்தடத்தில் இயக்கப்பட்டு வருகிறது. இந்த வழித்தடத்தில் அனைத்து நிறுத்தங்களிலும் நின்று செல்வதால் தனியார் பஸ்களில் அதிகம் பேர் பயணம் செய்தனர்.தமிழக அரசின் வெற்றி பயண திட்டத்தால், பெண் கள் பலரும் அரசு பஸ்களில் பயணம் செய்ய தொடங்கிவிட்டதால் அரசுபஸ்களில் கூட்டம் அதிகமாக உள்ளது. அதே நேரத்தில் தனியார் பஸ்களில் ஆண்கள்பயணம்செய்வதுடன்குறைவான பெண்கள் மட்டுமே பயணம் செய்து வருகின்றனர். இதனால் தனியார் பஸ்களில் பயணிகளின் வருகை குறைந்ததால் வருவாய் குறைந்தது.இதை ஈடுகட்டும் வகையில் சில பஸ்களின் உரிமையாளர்கள் தன்னிச்சையாகவே பஸ் டிக்கெட் கட்டணத்தை உயர்த்தியுள்ளனர். கட்டணம் உயர்வுபட்டுக்கோட்டையில் இருந்து தஞ்சை பழைய பஸ் நிலையத்துக்கு தனியார் பஸ்களில் முன்பு ரூ.31 கட்டணமாக வசூலிக்கப்பட்ட நிலையில், தற்போது ரூ.35 வசூலிக்கப்படுகிறது. அதேபோல் பட்டுக்கோட்டையில் இருந்து தஞ்சை புதிய பஸ் நிலையத்துக்கு முன்பு ரூ.36 வசூலிக்கப்பட்ட நிலையில் தற் போது ரூ.40 ஆக வசூலிக்கப்படுகிறது. திடீரென எந்தவித முன்னறிவிப்பும் இல்லாமல் தனியார் பஸ்களில் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளதால் பயணிகள் கடும் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.இது குறித்து பயணிகள் சிலர் கூறும்போது. முன்பெல்லாம் தஞ்சை பட்டுக்கோட்டை வழித்தடத்தில் தனியார் பஸ்களில் அதிகளவில் பொதுமக்கள் பயணம் செய்வார்கள். தற்போது தமிழக அரசின் வெற்றிப் பயணத்தால், பெண்கள் இலவசமாக பயணம் செய்யலாம் என்பதால், தனியார் பஸ்களை தவிர்த்து, அரசு பஸ்களில் பயணம் செய்து வருகின்றனர். இதனால் தனியார் பஸ்களில் கூட்டம் இல்லாமல் உள்ளது. திடீரென உயர்த்தப்பட்ட இந்த கட்டணத்தை உடனடியாக திரும்ப பெற வேண்டும் என்றனர். கருத்துஇது குறித்து தனியார் பஸ்களின் உரிமையாளர்கள் கூறும் போது, தமிழக அரசின் வெற்றிப் பயணத்தால், பெண்கள் பெருமளவு தனியார் பஸ்களில் பயணம் செய்வதை தவிர்த்து வருகின்றனர். இதனால் வருவாய் இழப்பு ஏற்படுகிறது. அன்றாடம் டீசல் நிரப்பவும், பணியாளர்களுக்கு சம்பளம் உள்பட இதர செலவுகளை கூட ஈடு செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.அரசிடம் பஸ் கட்டணத்தை உயர்த்தி தர வேண்டும் என கோரிக்கையை முன்வைத்துள்ளோம். ஆனால், ஒரு சில பஸ்களில் தன்னிச்சையாக உயர்த்தப்பட்டுள்ளதாக தெரிகிறது. அரசிடம் அறிவிப்பு வரும் வரைகட்டணம் உயர்த்த வேண்டாம் என நாங்கள் பணியாளர்களிடம் கூறியுள்ளோம். எங்களது நிலையை உணர்ந்து அரசு பஸ்களின் டிக்கெட் கட்டணத்தை உயர்த்தி தர வேண்டும் என்றனர்.

# சாயப்பட்டறையில் ரசாயன கசிவு... குடியிருப்புகளுக்குள் பரவியதால் பொதுமக்களுக்கு மூச்சுத்திணறல்




சேலம், அக். 8

சேலத்தில் சாயப்பட்டறையில் இருந்து திடீரென ரசாயன கசிவு ஏற்பட்டதால் 50 பேர் பாதிக்கப்பட்டு மூச்சுத்திணறல் ஏற்பட்டது.சாயப்பட்டறைசேலம் மாநகராட்சி 47வது வார்டு குகை தெற்கு முனியப்பன் கோவில் தெருவில் பத்ரிநாதன் என்பவருக்கு சொந்தமான சாயப்பட்டறை உள்ளது. இங்கு ஜவுளிகளுக்கு தேவையான துணி நூல்களுக்கு சாயமிடும் பணிகள் நடந்து வருகிறது. இந்த பட்டறையில் 10க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்து வருகிறார்கள்.நேற்று இரவு வழக்கம் போல்தொழிலாளர்கள்நூல்களுக்குசாயமிடுவதற்காக ஹைட்ரோ குளோரிக் என்ற ரசாயனம் கலந்து வேலையில் ஈடுபட்டு கொண்டிருந்தனர்.ரசாயன கசிவுஅப்போது, சாயப்பட்டறையில் இருந்து ரசாயனம் (ஆசிட்) திடீரென கசிய தொடங்கியது. இதனால் தொழிலாளர்களுக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டு வெளியே ஓடிவந்தனர் சாயப்பட்டறை அருகில் ஏராளமான குடியிருப்புகள் உள்ளன. இதனால் குடியிருப்புகளுக்குள் ரசாயனம் கசிந்ததால் வீடுகளில் இருந்த பொதுமக்கள் சுமார் 50க்கும் மேற்பட்டவர்களுக்கு கண் எரிச்சல் மற்றும் மூச்சுதிணறல் ஏற்பட்டது.இது தொடர்பாக அப்பகுதி பொதுமக்கள் செவ்வாய்பேட்டை தீயணைப்பு நிலையத்திற்கு தகவல் தெரிவித்தனர். அதன்பேரில் தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்திற்கு வந்து சாயப்பட்டறைக்குள் சென்று தண்ணீரை பீய்ச்சி அடித்து ரசாயன கசிவை கட்டுப்படுத்தினர்.மேலும், செவ்வாய்பேட்டை போலீசாரும் அங்கு வந்து விசாரணைநடத்தினர்.இதனிடையே,அந்தபகுதியில் வசிக்கும் பொதுமக்கள், அடிக்கடி இதுபோன்று சாயப்பட்டறையில் இருந்து ரசாயன கசிவு ஏற்படுவதாகவும், இதனால் கண் எரிச்சல், மூச்சு திணறல் ஏற்படுவதகாவும் புகார் தெரிவித்தனர். இதனை தொடர்ந்து சாயப்பட்டறை மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் அனுமதியுடன் செயல்படுகிறதா? என்பது குறித்து விசாரணை நடத்தப்பட்டுவருகிறது.நூல்களுக்குசாயமிடுதலுக்கு பயன்படுத்தப்படும் ஹைட்ரோ குளோரிக்கசிவு எப்படி ஏற்பட்டது? என்பது குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# நர்சுகள் போராட்டத்தில் தி.மு.க. அரசியல் செய்கிறது” அமைச்சர் அருண்ராஜ் பேட்டி



திண்டுக்கல், அக். 8

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் அரசு ஆஸ்பத்திரியில் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் அருண்ராஜ் நேற்று திடீர் ஆய்வு மேற் கொண்டார். பின்னர் அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:சென்னையில் இடைநிலை சுகாதார பணியாளர்கள் சங்கத்தை சேர்ந்த நர்சுகள் 21 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி நேற்று முன்தினம் இரவு வரை போராட் டத்தில் ஈடுபட்டனர். முதல்அமைச்சர் விஜய் தலைமையிலான த.வெ.க. அரசு, நர்சுகளின் கோரிக்கைகளை நிறைவேற்றி கொடுக்கக்கூடிய முயற்சியில் இருக்கிறது.

ஆனால் சுகாதார பணியாளர்கள் தங்களது கோரிக்கைகள் தொடர்பாக சுகாதாரத்துறை செயலாளரிடமோ, என்னிடமோ கூறவில்லை. அப்படி இருக்கும் போது, போராட்டம் தான் முதல்முயற்சியாக செய்வது வருத்தமாக உள்ளது.மேலும் கோரிக்கைகளை நிறைவேற்றி தருவதாக பேச்சுவார்த்தைக்கு அழைத்தோம். அப்போது தலைமை செயலகத்திற்கு வந்த 10 பேர் கொண்ட போராட்ட குழுவினர், முன்னாள் தி.மு.க. அமைச்சர் மனோ தங்கராஜூவும் வருவார் என்றனர். போராட்டம் நடத்திய சுகாதார பணியாளர்களுக்கும், மனோ தங்கராஜூவுக் கும் என்ன சம்பந்தம். நாங்கள் சுகாதார பணியாளர்களின் கோரிக்கைகளை நேரடியாக கேட்க தயாராக தான் இருந்தோம்.

ஆனால் மனோதங்கராஜ் விடாப் பிடியாக நானும் கூட வருவேன் என்று அங்கு ஒரு அசாதாரண சூழ்நிலையை உருவாக்கினார். இதனால் தான் அந்த சந்திப்பு நடைபெறாமல் போனது. இந்த விஷயத்தில் தி.மு.க. வினர் தேவையில்லாமல் அரசியல் செய் கின்றனர். அரசுக்கும், சுகாதார பணியாளர்களுக்கும் இடையே நடக்க வேண்டிய பேச்சுவார்த்தை தாமதம் ஆனதற்கு முன்னாள் அமைச்சர் குறுக்கீடு தான் காரணம்.

போராடுபவர்களை த.வெ.க. அரசு கண்டு கொள்ளவில்லை என்று முன்னாள் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார். அது முற்றிலும் தவறு. நாங்கள் போராட்டம் நடத்திய சுகாதார பணியாளர்களிடம் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தொடர்ந்து அழைத்துக்கொண்டு தான் இருந்தோம். நிச்சயம் அவர்களுடையகோரிக்கைகளைஆய்வுசெய்து,சுமுகமான முறையில் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும்.

தொகுப்பூதியத்தில் பணியாற்றும் நர்சுகள், தங்களை பணி நிரந்தரம் செய்யக் கோரி நீண்டகாலமாக போராடி வருகின்றனர். தொகுப்பூதியத்தில் பணியாற்றும் 2,500 நர்சுகளை பணி நிரந்தரம் செய்வதற்கான அறிவிப்பு பட்ஜெட்டில் தெரிவிக் கப்பட்டு இருந்தது. அதற்கான அரசாணை 2 அல்லது 3 வாரங்களில் வெளியி டப்பட இருக்கிறது.

மேலும் 1,695 புதிய செவிலியர் பணியிடங்களை உருவாக்க உள்ளோம். இதுமட்டுமின்றி காலியாக உள்ள 4,724 செவிலியர் பணியிடங்க ளுக்கு அந்தந்த மாவட்ட நலச்சங்கங்கள் மூலம் நிரப்புவதற்கு அரசாணை வந்து விட்டது.

இவ்வாறு அவர் கூறினார்.

# கனமழை காரணமாக வெள்ளப்பெருக்கு: கோவை குற்றாலத்தில் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை



கோவை, அக். 8

கனமழை காரணமாக கோவை குற்றாலம் அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. கனமழைகோவை போளுவாம்பட்டி வனச்சரகத்துக்குள்பட்ட சாடிவயல் பகுதியில் அமைந்துள்ள கோவை குற்றாலம் அருவிக்கு உள்ளூர் மக்கள் மட்டுமன்றி, வெளி மாவட்டங்கள் மற்றும் அண்டை மாநிலங்களில் இருந்தும் சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர். இந்த சூழலில், மேற்குத் தொடர்ச்சி மலையின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்து வரும் கனமழை காரணமாக, அருவிக்கு வரும் நீரின் அளவு அதிகரித்துள்ளது. இதனால், அருவியில் கடுமையான வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.தற்காலிகமாக மூடல் இந்நிலையில் சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை கவனத்தில் கொண்டு கோவை குற்றாலம் சூழல் சுற்றுலா மறு அறிவிப்பு வரும் வரை தற்காலிகமாக மூடப்படுவதாக வனத்துறை அறிவித்துள்ளது. நீர்வரத்து குறைந்து, பாதுகாப்பு சூழல் சீரடைந்த பின்னரே சுற்றுலாப் பயணிகள் மீண்டும் குளிக்க அனுமதிக்கப்படுவார்கள் என்றும், அருவிப்பகுதி மற்றும் வன எல்லைக்குள் அத்துமீறி யாரும் நுழைய வேண்டாம் என்றும் வனக்கோட்டம் வெளியிட்ட அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 3 பதக்கங்கள் வென்று சாதனை படைத்த வித்யா ராம்ராஜ் நேரில் அழைத்து பாராட்டிய தனுஷ்



சென்னை, அக். 8

வித்யா ராம்ராஜின் வரலாற்றுச் சாதனையை பாராட்டும் விதமாக நடிகர் தனுஷ், வித்யா ராம்ராஜை நேரில் அழைத்து வாழ்த்து தெரிவித்துள்ளார்.ஆசிய விளையாட்டு போட்டியில் வித்யா ராம்ராஜ் சாதனைஜப்பானின் அய்ச்சி மாகாணத்தில் உள்ள நகோயாநகரின்மிசுஹோபார்க்தடகளமைதானத்தில் 20வது ஆசிய விளையாட்டு போட்டிகள் நடைபெற்றன. இதில் ஆசிய கண்டத்தை சேர்ந்த 45 நாடுகளில் இருந்து சுமார் 11 ஆயிரம் வீரர், வீராங்கனைகள் பங்கேற்று தங்களது திறமையை வெளிப்படுத்தினர். இந்த போட்டியில் இந்திய அணி 85 பதக்கங்களை வென்று பதக்கப் பட்டியலில் 4வது இடத்தை பிடித்தது.இந்த ஆசிய விளையாட்டு போட்டியில் தமிழகத்தை சேர்ந்த தடகள வீராங்கனை வித்யா ராம்ராஜ் 3 பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளார். மகளிர் 400 மீட்டர் தடைதாண்டும் ஓட்டத்தில் வெண்கலப் பதக்கமும், 4x400 மீட்டர் கலப்பு தொடர் ஓட்டத்தில் வெள்ளிப் பதக்கமும், மகளிர் 4x400 மீட்டர் தொடர்ஓட்டத்தில்தங்கப் பதக்கமும் வென்றுள்ளார். இதில் 400 மீட்டர் தடைதாண்டும் ஓட்டத்தில் வெண்கலம் வென்றதன் மூலம், பி.டி.உஷாவின் 42 ஆண்டுகால தேசிய சாதனையையும் வித்யா ராம்ராஜ் முறியடித்துள்ளார். ஒரேஆசியவிளையாட்டுபோட்டியில்3பதக்கங்களை வென்றதன் மூலம் வித்யா ராம்ராஜ் வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார்.தனுஷ் வாழ்த்துவித்யா ராம்ராஜின் சாதனைக்கு பல்வேறு தரப்பினரும் பாராட்டு தெரிவித்து வருகின்றனர். அந்த வகையில், அவரது வரலாற்றுச் சாதனையை பாராட்டும் விதமாக நடிகர் தனுஷ், வித்யா ராம்ராஜை நேரில் அழைத்து வாழ்த்து தெரிவித்துள்ளார். முன்னதாக, தமிழக விளையாட்டுத் துறை அமைச்சர் விக்னேஷ் மற்றும் தமிழக முதல்அமைச்சர் விஜய் ஆகியோரும் வித்யா ராம்ராஜை நேரில் சந்தித்து வாழ்த்தியதுடன், ஊக்கத்தொகையும் வழங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# “எங்களை தொட்டுப்பார்த்தால் நடப்பதே வேறு..” மிரட்டல் விடுத்த கொள்ளை கும்பல்: தட்டி தூக்கிய போலீசார்

கோவை, அக். 8

தமிழ்நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் கொலை, கொள்ளையில் ஈடுபட்ட 9 பேர் கொண்ட கும்பலை கோவை போலீசார் கைது செய்தனர். விமானத்தில் பறந்து வந்தும் குற்றச்செயலில் ஈடுபட்டது விசாரணையில் தெரிய வந்துள்ளது.சினிமா பாணியில்கடந்த 2025ம் ஆண்டு டிசம்பர் மாதம் கோவை குனியமுத்தூர் பகுதியில் கல்லூரி மாணவர்களை வழிமறித்து கத்திமுனையில் மிரட்டிப் பணம் மற்றும் நகை பறிப்பில் ஒரு கும்பல் ஈடுபட்டது. இந்த சம்பவம் குறித்து தகவல் அறிந்து அவர்களை பிடிக்க முயன்ற ரோந்து போலீசார் மீது, காரில் இருந்தபடியே மிளகாய்ப் பொடியைத் தூவி விட்டு சினிமா பாணியில் கும்பல் தப்பிச்சென்றது.கோவையில் இருந்து தப்பிய இந்த கும்பல், தேனி மாவட்டத்திற்கு சென்று அங்கு போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் ஒருவரின் வீட்டின் பூட்டை உடைத்து 100 பவுன் நகைகளை கொள்ளையடித்தது. பின்னர் போலீசின் பிடியில் இருந்து தப்பிப்பதற்காக டெல்லி சென்று தலைமறைவாகினர்.கொடூர கொலைடெல்லியில் சில மாதங்கள் பதுங்கி இருந்த இந்த கும்பல், கடந்த மாதம் விமானம் மூலமாக மீண்டும் தமிழகத்திற்கு திரும்பியது. தமிழகம் வந்த கையோடு சிவகங்கை மாவட்டம் கீழடி பகுதியில் ஒருவரை கொடூரமாக கொலை செய்து விட்டு மீண்டும்கோவைக்குத்தப்பிவந்தனர்.தொடர்குற்றங்களில் ஈடுபட்டு வந்த இந்த கும்பலை பிடிக்கக் கோவை மாநகர போலீஸ் கமிஷனர் ரம்யாபாரதி, துணை கமிஷனர் கார்த்திகேயன் உத்தரவின் பேரில் குனியமுத்தூர் இன்ஸ்பெக்டர் காமாட்சி நாதன், சப்இன்ஸ்பெக்டர் தாமரைசெல்வன்மற்றும்போலீசார்அடங்கியதனிப்படை அமைக்கப்பட்டது.செல்போன் எண்கள் மற்றும் கண்காணிப்பு கேமராக்கள் மூலம் போலீசார் தீவிரக்கண்காணிப்பில் ஈடுபட்டனர். இந்த நிலையில்




கோவை உக்கடம் பகுதியில் பதுங்கி இருந்த கும்பலின் தலைவன் உள்பட 9 பேரை சுற்றி வளைத்து அதிரடியாக கைது செய்தனர்.1. ஆகாஷ் (வயது 23), சிவகங்கை 2. மனோஜ் குமார்(26), தஞ்சாவூர், 3.முத்துப்பாண்டி (24), திண்டுக்கல் 4. அண்ணாமலை(25), கோவை சுந்தராபுரம் 5. அருண்பாண்டி(27) மதுரை 6.எஸ்.புவனேஷ்(22), மதுரை. 7. அருண்(20), சிவகங்கை, 8.ராமர்(23), மதுரை, 9.கோபி நாத்(23), திண்டுக்கல்.இந்த கும்பலின் தலைவனான ஆகாஷ் மீது 25 குற்ற வழக்குகள் உள்ளன. அருண் மீது 31 வழக்குகளும், முத்துபாண்டி மீது 18 வழக்குகளும் உள்ளன. கூட்டாளிகள் மீது பல்வேறு வழக்குகள் உள்ளன. கைதான 9 பேரிடம் இருந்தும் கஞ்சா, மெத்த பெட்டமைன் உள்ளிட்ட போதை பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இவர்கள் 9 பேரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு கோவை மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.தமிழ்நாடு முழுவதும் கைவரிசை காட்டிய இந்த கும்பல் கோவையில் கைதானது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# மாதாந்திர பராமரிப்பு பணி: திருநெல்வேலியில் இன்று மின்தடை



திருநெல்வேலி, அக். 8

திருநெல்வேலி மின்பகிர்மான வட்டம், திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி நகர்ப்புறம் மற்றும் வள்ளியூர் கோட்டங்களில் உள்ள துணைமின் நிலையங்களில் நாளை மாதாந்திர பராமரிப்பு பணிகள் காரணமாக மின்தடை செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி நகர்ப்புற கோட்டம் செயற்பொறியாளர் ரவிராமதாஸ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

பழையபேட்டை மற்றும் பொருட்காட்சி திடல் துணைமின் நிலையத்தில் நாளை (8.10.2026, வியாழக்கிழமை) மாதாந்திர பராமரிப்பு பணிகள் நடைபெற இருப்பதால் பின்வரும் பகுதிகளில் காலை 9 மணி முதல் மதியம் 2 மணி வரை மின் விநியோகம் இருக்காது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

அதன்படி திருநெல்வேலி டவுன், மேலரதவீதி மேல் பகுதிகள், தெற்குரதவீதி தெற்கு பகுதிகள், வடக்குரதவீதி வடக்கு பகுதிகள், பழையபேட்டை, காந்திநகர், திருப்பணிகரிசல்குளம், வாகைகுளம், குன்னத்தூர், பேட்டை, தொழிற்பேட்டை, கோட்டீஸ்வரன்நகர், சாஸ்திரிநகர், தீன்நகர், திருமங்கைநகர், செந்தமிழ்நகர், பாட்டபத்து, அபிஷேகப்பட்டி, பொருட்காட்சிதிடல், திருநெல்வேலிடவுன் SN ஹைரோடு, பூம்புகார், ஸ்ரீபுரம், சிவந்திரோடு, சுந்தரர்தெரு, பாரதியார் தெரு, C.N.கிராமம், குறுக்குத்துறை, கருப்பன்துறை, டவுன் கீழரதவீதி, போஸ் மார்க்கெட், A.P. மாடத்தெரு, சாமி சன்னதி தெரு, அம்மன் சன்னதி தெரு, மேல மாடவீதி, கள்ளத்திமுடுக்கு தெரு, நயினார்குளம் ரோடு, சத்தியமூர்த்தி தெரு, போத்தீஸ் நயினார்குளம், மார்க்கெட், வ.உ.சி. தெரு, வையாபுரி நகர், பாரத் இந்துஸ்தான் பெட்ரோலியம், சிவன் கோவில், தெற்கு தெரு, ராம்நகர் மற்றும் ஊர் உடையான் குடியிருப்பு பகுதிகளில் மின்தடை செய்யப்படும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

வள்ளியூர் கோட்ட செயற்பொறியாளர் வளன்அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

நாங்குநேரி (AMRL) துணை மின் நிலையத்தில் நாளை (8.10.2026, வியாழக்கிழமை) மாதாந்திர பராமரிப்பு பணிகள் செய்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக மேற்சொன்ன துணை மின் நிலையத்தில் மின்விநியோகம் தடை செய்யப்படும். எனவே பின்வரும் ஊர்கள் மற்றும் அதனை சார்ந்த பகுதிகளில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ள நேரங்களில் மின்விநியோகம் இருக்காது.

நாங்குநேரி, இராஜக்கள்மங்களம், சிறுமளஞ்சி, பெருமளஞ்சி, பெருமளஞ்சி கீழ் ஊர், பெருமளஞ்சி மேல் ஊர், ஆச்சியூர், வாகைகுளம், கோவனேரி, AMRL தொழிற்கூடம் ஆகிய இடங்களில் மின்தடை செய்யப்படும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# 15ம் தேதி ‘வீ த லீடர்ஸ்’ அமைப்பு சார்பில் அரசியல் மையம் தொடக்கம்




சென்னை. அக். 8

அண்ணாமலை தொடங்கியுள்ள ‘வீதி லீடர்ஸ்’ அமைப்பு சார்பில், கோவையில் அமைக்கப்பட்டுள்ள அப்துல் கலாம் நெறிமுறை மற்றும் அரசியல் மையம் வரும் 15ம் தேதி திறந்து வைக்கப்பட உள்ளது.

பாரதிய ஜனதா கட்சியின் முன்னாள் மாநிலத் தலைவராக இருந்த அண்ணாமலை, ஜூன் 5 ஆம் தேதி அக்கட்சியிலிருந்து விலகி ‘வி த லீடர்ஸ்’ என்ற அரசியல் இயக்கத்தை தொடங்கினார். முதலில் இயக்கமாக தொடங்கி, விரைவில் அரசியல் கட்சியாக பதிவு செய்யப்படும் என்றும், வருகின்ற மக்களவைத் தேர்தலில் போட்டியிடப் போவதாகவும் அறிவித்தார்.

இது குறித்து, அந்த அமைப்பின் சமூக ஊடக பிரிவு பொதுச்செயலர் அஸ்பயர் சுவாமிநாதன் கூறுகையில், “அரசியலமைப்பு, ஜனநாயகம், ஆட்சி நிர்வாகம், உள்ளாட்சி, தலைமை பண்பு குறித்து, அமைப்பின் உறுப்பினர்களுக்கு பயிற்சி வழங்கப்படும். பொது இயக்கம் என்பது, தேர்தல் அரசியலுடன் முடிவதில்லை. பொதுப்பிரச்னைகளை அடையாளம் கண்டு, மக்களை ஒருங்கிணைத்து, தீர்வு காண வேண்டும். அதற்காக தான், இந்த மையம் உருவாக்கப்பட்டுள்ளது.வரும்15ம்தேதி,இந்தமையத்தை, அண்ணாமலை தொடங்கி வைக்கிறார். முதல் கட்டமாக, 100 பேருக்கு இரண்டு நாள் பயிற்சியும், பின், அவர்களுக்கு 100 நாள் களப்பயிற்சியும் வழங்கப்படும்” என்று அவர் கூறினார்.

தினகனி

NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253

08.10.2026

# மது கேட்டு தொல்லை கொடுத்த மனைவியை கொன்ற தொழிலாளி கைது



சென்னை, அக். 8

சென்னை பெருங்குடி கல்லுக்குட்டையைச் சேர்ந்தவர் லோகநாதன் (வயது 38). உணவு வினியோகம் செய்யும் வேலை செய்து வருகிறார். இவரது மனைவி சுதா (28). திருமணமாகி 8 ஆண்டுகள் ஆகியும் குழந்தைகள் இல்லை. இருவருக்கும் மது அருந்தும் பழக்கம் இருந்ததாக கூறப்படுகிறது.

சம்பவத்தன்று இரவு கணவன்மனைவி இருவரும் சேர்ந்து மது அருந்திக் கொண்டிருந்தனர். அப்போது சுதா மேலும் மது கேட்டுள்ளார். அதற்கு லோகநாதன், டாஸ்மாக் கடை மூடிவிடும் என கூறினார். அதற்கு சுதா, 'பிளாக்கில் வாங்கி வா' என கேட்டு தொல்லை கொடுத்ததால் இருவருக்கும் இடையே தகராறு ஏற்பட்டது. இதில் ஆத்திரமடைந்த லோகநாதன், துப்பட்டாவால் சுதாவின் கழுத்தை நெரித்து கொலை செய்தார். பின்னர் மது போதையில் வீட்டிலேயே தூங்கிவிட்டார். நேற்று காலை எழுந்த போதுதான் சுதா இறந்து விட்டது தெரியவந்தது. உடனே வீட்டை பூட்டிவிட்டு தரமணி பகுதியில் சுற்றித்திரிந்த லோகநாதன், மாலையில் சைதாப்பேட்டை சென்று தனக்குத் தெரிந்த நபரிடம் மனைவியை கொலை செய்துவிட்டதாக கூறினார். இதுகுறித்து தகவல் அறிந்த துரைப்பாக்கம் போலீசார் சைதாப் பேட்டை சென்று லோகநாதனை கைது செய்தனர். இந்த சம்பவம் சென்னையில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது

# விவசாயிகளுக்கு புதிய வசதி: கூட்டுறவு சங்கங்களில் விதைகள், உரங்கள் ரொக்கத்துக்கு விற்பனை



சென்னை, அக். 8

கூட்டுறவுத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் வாயிலாக விவசாயிகள் பயனடையும் வகையில், பயிர் சாகுபடிக்கு தேவையான விதைகள் மற்றும் ரசாயன உரங்கள் உள்ளிட்ட இடுபொருட்களை ரொக்கத்துக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு பயிர் சாகுபடிக்கு தேவையான நிதியானது குறுகிய காலக்கடனாக வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இக்கடனின் ஒரு பகுதியாக விதைகள் மற்றும் ரசாயன உரங்கள் உள்ளிட்ட இடுபொருட்களும் வழங்கி வினியோகிக்கப்பட்டு வருகின்றன.

தற்போது வரைகூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர்களாக இல்லாத விவசாயிகளும், உடனடியாக உறுப்பினராக இணைந்து குறைந்த வட்டியில் வழங்கப்படும் பயிர்க்கடனை பெற்று பயனடையலாம்.

இதன்மூலம் விதைகள் மற்றும் ரசாயன உரங்களையும் அவர்கள் பெற முடியும். இந்தநிலையில், விவசாயிகள் அனைவரும் பயன்பெறும் வகையில், விதைகள் மற்றும் ரசாயன உரங்கள் உள்ளிட்ட இடுபொருட்களை நிர்ணயிக்கப்பட்ட அதிகபட்ச விற்பனை விலைக்கு (எம்.ஆர்.பி.) மிகாமல் ரொக்கப் பணம் கொடுத்து பெற்றுக்கொள்ளவும் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தமிழக அரசு மருத்துவமனைகளில் மும்மொழி கொள்கை அமலா? டி.ஆர்.பி.ராஜா கேள்வி




சென்னை, அக். 8

கோவை, கரூர் அரசு மருத்துவமனைகளில் நோயாளிகளின் மாத்திரைக் கவரில் தமிழ்,

ஆங்கிலத்துடன், தற்போது இந்தியும் இடம் பெற்றிருப்பது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இதுநாள் வரை இரு மொழியில் இருந்த விபரங்கள், மும்மொழிக்கு மாறியது ஏன்? என்ற கேள்வி எழுந்துள்ளது.

இந்தநிலையில், தமிழ்நாட்டின் அரசு மருத்துவமனைகளில் மாத்திரைகள் வழங்கப்படும் காகித உறைகளில் இந்தி மொழியும் சேர்க்கப்பட்டிருப்பதாக தவெக அரசு மீது திமுக முன்னாள் அமைச்சர் டிஆர்பி ராஜா குற்றம் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து, டிஆர்பி ராஜாவின் எக்ஸ் பக்கத்தில் தெரிவித்திருப்பதாவது, "தமிழ்நாடு மருத்துவமனைகளில் மும்மொழிக் கொள்கை அமலுக்கு வந்துள்ளதுபோல. முதலில் கரூர், இப்போது கோவையிலும் அதே நிலைமை.

தமிழகத்தில் மாற்றம் இல்லை; நாற்றம்தான் உள்ளது. இந்தி எதற்கு? மேலும் ஒரு துரோகம்" எனக் கூறியுள்ளார்.

# குற்றாலம் மெயின் அருவிக்கு சுற்றுலா பயணிகள் செல்ல தடை

தென்காசி, அக். 8

குற்றாலம் மெயின் அருவியில் கடந்த ஆண்டு பராமரிப்பு பணிகள் நடைபெற்றன. அப்போது மெயின் அருவியில் இருந்தபழைய ஆர்ச் அகற்றப்பட்டு, சற்று இடைவெளியில் புதியதாக பெரிய வளைவு கட்டப்பட்டது. தரைத்தளத்திலும் கற்கள் பதிக்கும் பணிகள் நடைபெற்றன. இந்த பணிகள் நிறைவடைவதற்குள் குற்றாலத்தில் சீசன் தொடங்கியதால், சுற்றுலா பயணிகள் குளிக்க அனுமதிக்கப்பட்டனர்.

தற்போது அருவியில் நீர்வரத்து குறைந்ததால், பராமரிப்பு பணிகள் மீண்டும் தொடங்கப்பட்டன. வெள்ளத்திலும் சேதமடையாதவாறு ராட்சத கற்கள் பதிக்கப்படுகின்றன. மெயின் அருவியில் ஆண்கள் குளிக்கும் பகுதியில் மட்டும் லேசாக தண்ணீர் விழுகிறது. அதனை திருப்பி விட்டு, அங்கு தரைத் தள கற்கள் பதிக்கப்படுகின்றன. இதையொட்டி மெயின் அருவி மூடப்பட்டதாக அறிவிக்கப்பட்டு, அங்கு சுற்றுலா பயணிகள் செல்ல தடை விதிக்கப்பட்டு உள்ளது. வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்குள் பராமரிப்பு பணிகளை விரைவில் நிறைவு செய்தவுடன் சுற்றுலா பயணிகள் குளிக்க அனுமதிக்கப்படுவார்கள் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

# இன்றைய ராசி பலன்கள் (08.10.2026)

**மேஷம்:** முயற்சிகளில் முன்னேற்றம் கிடைக்கும். பணவரவு சீராகும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**ரிஷபம்:** வேலைப்பளு அதிகரிக்கலாம். அவசர முடிவுகளைத் தவிர்க்கவும். செலவுகளில் கவனம் தேவை.

**மிதுனம்:** புதிய வாய்ப்புகள் கிடைக்கும். நண்பர்கள் மற்றும் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். எதிர்பார்த்த செய்தி வரலாம்.

**கடகம்:** குடும்ப விஷயங்களில் நல்ல மாற்றம் ஏற்படும். பணம் தொடர்பான முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும்.

**சிம்மம்:** தன்னம்பிக்கை அதிகரிக்கும். தொழில் அல்லது வேலையில் முக்கியமான முடிவெடுக்கலாம். வருமானம் மேம்படும்.

**கன்னி:** திட்டமிட்ட காரியங்களை பொறுமையுடன் செய்யுங்கள். தேவையற்ற செலவுகளைத் தவிர்ப்பது நல்லது.

**துலாம்:** உறவுகளில் இருந்த கருத்து வேறுபாடுகள் குறையும். புதிய அறிமுகங்கள் பயனுள்ளதாக அமையும்.

**விருச்சிகம்:** உழைப்புக்கான அங்கீகாரம் கிடைக்கும். பண விஷயங்களில் சாதகமான நிலை. பயண வாய்ப்பு ஏற்படலாம்.

**தனுசு:** புதிய முயற்சிகளுக்கு நல்ல நாள். தொழில் வளர்ச்சிக்கான வாய்ப்புகள் கிடைக்கும். குடும்பத்துடன் நேரம் செலவிடுவீர்கள்.

**மகரம்:** பொறுப்புகள் அதிகரிக்கும். பணவரவு இருந்தாலும் செலவும் கூடலாம். முக்கிய முடிவுகளில் நிதானம் தேவை.

**கும்பம்:** எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வேலை/தொழிலில் முன்னேற்றம் காணலாம். மனதில் இருந்த குழப்பம் குறையும்.

**மீனம்:** நல்லசெய்திகள்கிடைக்கவாய்ப்பு உள்ளது. குடும்பத்தில் சுபநிகழ்வுகள் பற்றிய பேச்சு வரலாம். பொருளாதார நிலை திருப்திகரமாக இருக்கும்.

# ரூ.5 ஆயிரம் லஞ்சம் வாங்கிய அதிகாரி வீட்டில் ரெய்டு: ரூ.1.50 கோடிக்கு நகைகள் வாங்கிய ரசீதுகள் சிக்கின



திண்டுக்கல், அக். 8

திண்டுக்கல் மாவட்டத்தில் லஞ்ச புகாரில் கைது செய்யப்பட்ட சுகாதாரத்துறை இணை இயக்குனர் ஜெகவீரபாண்டியனின் வீட்டில், விஜிலென்ஸ் போலீசார் சோதனை நடத்தியதில் ரூ.1.50 கோடிக்கு நகைகள் வாங்கிய ரசீதுகள் சிக்கின. திண்டுக்கல் மாவட்டம், சின்னாளப்பட்டியைச் சேர்ந்த ஜெகவீரபாண்டியன், தமிழக சுகாதாரத்துறையில் துணை இயக்குனராக சிவகாசியில் பணியாற்றினார். பணிக்கான ஒப்பந்த தொகையை விடுவிக்க ரூ.5 ஆயிரம் லஞ்சம் பெற்ற புகாரில், விருதுநகர் லஞ்ச ஒழிப்பு போலீசார் ஜெகவீரபாண்டியனை நேற்று முன்தினம் கைது செய்தனர். லஞ்ச ஒழிப்பு போலீசார் சோதனை திண்டுக்கல் லஞ்ச ஒழிப்பு போலீசார் சின்னாளப்பட்டியில் உள்ள ஜெகவீரபாண்டியன் வீட்டில், நேற்று அதிகாலை 1 மணி வரை நடத்திய சோதனையில் ஜெகவீரபாண்டியன் அவரதுமகள்பெயரில் ரூ.1.50 கோடிக்கு தங்க நகை வாங்கியதற்கான ஆவணங்கள் சிக்கின.

ரூ.1.50 கோடிக்கு நகைகள்; போலீசார் விசாரணை கல்லூரி மாணவியான அவரது மகள், எந்த பணிக்கும் செல்லாத நிலையில் ரூ.1.50 கோடிக்கு எப்படி நகைகள் வாங்கினார் என போலீசார் விசாரித்தனர். அப்போது 2019 முதல் 2026 வரை வாங்கப்பட்ட தங்க நகைகள், ரசீதுகளுக்குரிய நகைகள் அனைத்தும் வங்கி லாக்கரில் இருப்பதாக ஜெகவீரபாண்டியனின் குடும்பத்தினர் தெரிவித்தனர். நகைகளுக்கான ரசீதுகளையும், வங்கி லாக்கருக்கான சாவியையும் போலீசார் பறிமுதல் செய்து விசாரித்து வருகின்றனர்.

# தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான முதல் டெஸ்ட்: கேமரூன் கிரீன் விலகல்



தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலியாவின் ஆல்ரவுண்டர் கேமரூன் கிரீன் விளையாட மாட்டார் என்று அந்த அணியின் தலைமைப் பயிற்சியாளர் ஆண்ட்ரூ மெக்டொனால்ட் தெரிவித்துள்ளார்.

காயம் காரணமாக கிரீன் முதல் டெஸ்டில் இருந்து விலகியுள்ளார். கடந்தவாரம்போட்செப்ஸ்ட்ரூமில்நடைபெற்ற தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான 3வது ஒருநாள் போட்டியின்போது பேட்டிங் செய்த அவர்,பந்து தாக்கியதில் காயமடைந்தார்.

அதன்பின்னர் நடைபெற்ற இரண்டு நாள் பயிற்சி ஆட்டத்திலும் கிரீன் பங்கேற்கவில்லை. தற்போது அவர் காயத்திலிருந்து மீண்டு வருவதற்கான சிகிச்சை மற்றும் பயிற்சிகளை மேற்கொண்டு வருகிறார்.

27 வயதான கிரீன், இந்தத் தொடரின் பின்னர் நடைபெறும் போட்டிகளில் களமிறங்குவார் என்ற நம்பிக்கையில் ஆஸ்திரேலிய அணி உள்ளது. இருப்பினும், அவர் மீண்டும் களமிறங்கினால் பேட்டராக மட்டுமே விளையாட வேண்டிய சூழல் ஏற்படலாம்.

முதல் டெஸ்ட் நெருங்கும் நிலையில், வெப்ஸ்டரை களமிறக்குவதா அல்லது வேறு அணிச் சேர்க்கையை தேர்வு செய்வதா என்பதை ஆஸ்திரேலியா முடிவு செய்ய உள்ளது.

# ரொனால்டோ ஓய்வு பெறவில்லை..வெளியான குட் நியூஸ்




போர்ச்சுகல்கால்பந்துஅணியின்கேப்டன்கிறிஸ்டியானோ ரொனால்டோ சர்வதேச கால்பந்தில் இருந்து ஓய்வு பெறவில்லை என்று தெளிவுபடுத்தியுள்ளார். போர்ச்சுகல் அணியின் முகாமில் இருந்து அவர் திடீரென வெளியேறியதைத் தொடர்ந்து, அவரது சர்வதேசகால்பந்து வாழ்க்கை முடிவுக்கு வருவதாக செய்திகள் பரவிய நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

சமீபத்திய நேஷன்ஸ் லீக் போட்டிகளுக்காக போர்ச்சுகல் அணியின் முகாமில் இருந்த ரொனால்டோ, பயிற்சியாளர் ஜார்ஜ் ஜீசஸ் தன்னிடம் அளித்த வாக்குறுதியை இருமுறை மீறியதாக குற்றம்சாட்டியுள்ளார். நார்வேக்கு எதிரான போட்டியில் சுமார் 30 நிமிடங்கள் விளையாட வாய்ப்பு வழங்கப்படும் என ஜீசஸ் கூறியதாகவும், அதற்காக இரண்டாவது பாதியில் நீண்ட நேரம் வார்ம்அப் செய்தும் இறுதியில்களமிறக்கப்படவில்லைஎன்றும்ரொனால்டோ தெரிவித்துள்ளார். இதன் பின்னர், டென்மார்க்கு எதிரான போட்டிக்கு முன்பாக அணியின் முகாமில் இருந்து அவர் வெளியேறினார்.

தான் அணியை விட்டு வெளியேறிய விதம் சரியானது அல்ல என்பதை ஏற்றுக்கொண்ட ரொனால்டோ, தனது சக வீரர்கள் மற்றும் ரசிகர்களிடம் மன்னிப்பு கேட்டுள்ளார்.

மேலும், போர்ச்சுகல் கால்பந்து கூட்டமைப்பு தன்னை தண்டிக்க வேண்டும் என்றும், அந்தத் தண்டனையை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அனைத்தையும் விட முக்கியமாக, ரொனால்டோ சர்வதேச கால்பந்தில் இருந்து ஓய்வு பெறும் எண்ணத்தில் இல்லை என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

நான் உடல் தகுதியுடன் இருந்து, எனது கிளப் அணிக்காக சிறப்பாக விளையாடி, கோல்கள் அடித்துக் கொண்டிருந்தால், எனக்கு விதிக்கப்படும் தண்டனை முடிந்த பிறகு போர்ச்சுகல் அணிக்காக விளையாட நான் தயாராக இருப்பேன். என்று ரொனால்டோ தெரிவித்துள்ளார்.

# சீன ஓபன்: கரோலினா முச்சோவா காலிறுதிக்கு முன்னேற்றம்



சீனஓபன்சர்வதேசடென்னிஸ்போட்டி பீஜிங்கில்நடந்து வருகிறது. இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவின் 4வது சுற்று ஆட்டம் ஒன்றில் தரவரிசையில் 8வது இடத்தில் இருக்கும் செக்குடியரசு வீராங்கனை கரோலினா முச்சோவா முதல் மற்றும் கடைசி செட்டில் சரிவில் இருந்து மீண்டு வந்ததுடன் 75, 16, 76 (97) என்ற செட் கணக்கில் முன்னாள் 'நம்பர் ஒன்' வீராங்கனையான நவோமி ஒசாகாவுக்கு (ஜப்பான்) அதிர்ச்சி அளித்து காலிறுதிக்கு முன்னேறினார். மிரா ஆன்ட்ரீவா, எகதெரினா அலெக்சாண்ட்ரோவா (ரஷியா), நிகோலா பார்துன்கோவா (செக்குடியரசு) ஆகியோரும் தங்களது ஆட்டங் களில் வெற்றி பெற்றனர்.

# அனுபமா நடித்த ‘கிரேஸி கல்யாணம்’ படத்தின் ரிலீஸ் தேதி அறிவிப்பு



‘கிரேஸி கல்யாணம்’ திரைப்படம் முதலில் அக்டோபர் 30ம் தேதி வெளியாகும் என அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில், தற்போது படத்தின்வெளியீடுஇரண்டுவாரங்களுக்குமுன்கூட்டியேமாற்றப்பட்டுள்ளது. அதன்படி, வரும் அக்டோபர் 16ம் தேதி உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாகிறது. மலையாளத்தில் பிரேமம் படத்தின் மூலம் சினிமாவில் அறிமுகம் ஆனவர் அனுபமா பரமேஸ்வரன். தமிழ் திரைப்பட ரசிகர்கள் மத்தியிலும் முதல் படத்திலேயே நன்கு பரிட்சயமான அனுபமா, தமிழில் கொடி, டிராகன் மற்றும் பைசன் காளமாடன் உள்ளிட்ட படங்களில் நடித்துள்ளார். தமிழ் மட்டும் இன்றி தெலுங்கு, மலையாள படங்களில் நடித்து முன்னணி நடிகைகளில் ஒருவராக உள்ளார். தற்போது இவரது நடிப்பில் உருவாகியுள்ள தெலுங்கு திரைப்படம் ‘கிரேஸி கல்யாணம்’. குடும்பப் பின்னணியில் நகைச்சுவைக்கு முக்கியத்துவம் அளித்து உருவாகியுள்ள இப்படத்தில் விகே நரேஷ், தருண் பாஸ்கர், அகில் ராஜ் உட்டேமாரி உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். பத்ரப்பா காஜுலா இயக்கியுள்ள இப்படத்தை ஆரோ சினிமாஸ் சார்பில் பூசம் ஜெகன் மோகன் ரெட்டி தயாரித்துள்ளார். சுரேஷ் பொப்பிலி இசையமைத்துள்ளார். திருமணத்தை மையமாகக் கொண்ட இப்படத்தில் அனுபமா பரமேஸ்வரன் ‘கீர்த்தி’ என்ற கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். மகளுக்கு பாரம்பரிய முறையில் திருமணம் செய்து வைக்க தந்தை முயற்சிக்க, தனது விருப்பத்தை நிறைவேற்ற கீர்த்தி முயற்சிப்பதால் ஏற்படும் குடும்பச் சூழல்கள் மற்றும் நகைச்சுவை சம்பவங்களை மையமாகக் கொண்டு கதை நகர்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. படத்தின்பாடல்கள்மற்றும்முன்னோட்டக்காட்சிகள்ரசிகர்கள்மத்தியில்கவனம்பெற்றுள்ள நிலையில், இளைஞர்கள் மற்றும் குடும்ப ரசிகர்களை கவரும் வகையில் படக்குழு விளம்பரப் பணிகளில் தீவிரம் காட்டி வருகிறது. இதற்கிடையில், ‘கிரேஸி கல்யாணம்’ திரைப்படம் முதலில் அக்டோபர் 30ம் தேதி வெளியாகும் என அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில், தற்போது படத்தின் வெளியீடு இரண்டு வாரங்களுக்கு முன்கூட்டியே மாற்றப்பட்டுள்ளது. அதன்படி, வரும் அக்டோபர் 16ம் தேதி உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாகிறது.

# திரையுலகில் ஒதுக்கப்பட்டேன்... ரசிகர்களின் அன்புதான் என்னை காப்பாற்றியது பார்வதி திருவோத்து



என் கருத்துக்களை வெளிப்படையாகக் கூறிய பிறகு, திரைத்துறையில் எனக்கு வாய்ப்புகள்குறைக்கப்பட்டு,நான்கிட்டத்தட்டமுழுமையாகஒதுக்கப்பட்டேன். என நடிகை பார்வதி திருவோத்து பேட்டி ஒன்றில் பேசியுள்ளார்.

‘பூ’ திரைப்படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமானவர் மலையாள நடிகை பார்வதி திருவோத்து. 17 ஆண்டுகளுக்கும் மேலாக திரைத்துறையில் பயணித்து வரும் இவர், தமிழில் குறைந்த எண்ணிக்கையிலான படங்களில் மட்டுமே நடித்திருந்தாலும், மலையாளத்தில் கதைக்கு முக்கியத்துவம் அளிக்கும் திரைப்படங்களைத் தேர்வு செய்து நடித்து வருகிறார்.

தமிழில் ‘சென்னையில் ஒரு நாள்’, ‘மரியான்’, ‘உத்தம வில்லன்’ உள்ளிட்ட படங்களில் நடித்துள்ள பார்வதி திருவோத்து, ரஞ்சித் இயக்கத்தில் விக்ரம் நடித்த ‘தங்கலான்’ திரைப்படத்திலும் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருந்தார். சமீபத்தில் ‘ஐ நோபடி’ திரைப்படத்திலும் நடித்திருந்தார்.

சினிமாவைத் தாண்டி பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் பல்வேறு சமூகப் பிரச்சினைகள் குறித்தும் பார்வதி திருவோத்து தொடர்ந்து தனது கருத்துகளை வெளிப்படுத்தி வருகிறார். இந்த நிலையில், சமீபத்திய பேட்டி ஒன்றில் தனது திரைப்பயணம் குறித்து பேசிய அவர், தனது கருத்துகளை வெளிப்படையாகக் கூறிய பிறகு திரைத்துறையில் தனக்கு வாய்ப்புகள் குறைக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், “என் கருத்துக்களை வெளிப்படையாகக் கூறிய பிறகு, திரைத்துறையில் எனக்கு வாய்ப்புகள் குறைக்கப்பட்டு, நான் கிட்டத்தட்ட முழுமையாக ஒதுக்கப்பட்டேன். ஆனால் என்னை திரையுலகில் இருந்து ஒதுக்க நினைத்த போதெல்லாம், மலையாள ரசிகர்கள் என் நடிப்புத் திறமையை மட்டுமே பார்த்து என்னை ஏற்றுக்கொண்டனர். ரசிகர்கள் என் மீது காட்டிய அன்பு ஒரு புனிதமான பிணைப்பு போன்றது. அதுவே என்னை இன்றும் திரையுலகில் உயிர்ப்புடன் வைத்திருக்கிறது” என்று தெரிவித்துள்ளார்.

# “சினிமாவை நம்பி புதிய பாதையில்...” தயாரிப்பாளராக களமிறங்கிய சிபிராஜ்

சிபிராஜ் ‘அண்டர்டாக்ஃபிலிம்ஸ்’ (UnderdogFilms) என்றபுதியதிரைப்படத்தயாரிப்புநிறுவனத்தைதொடங்கியுள்ளார். இந்த நிறுவனத்தின் முதல் தயாரிப்பாக ‘புரொடக்ஷன் நம்பர் 1’ திரைப்படம் உருவாகி வருகிறது.

நடிகர் சத்யராஜின் மகனான சிபிராஜ், 2003ம் ஆண்டு வெளியான ‘ஸ்டூடண்ட் நம்பர் 1’ திரைப்படத்தின் மூலம் நடிகராக அறிமுகமானார். தொடர்ந்து பல்வேறு படங்களில் நடித்து வரும் அவர், வித்தியாசமான கதைகளை தேர்வு செய்து நடித்து வருகிறார். கடைசியாக ‘டென் ஹவர்ஸ்’ திரைப்படத்தில் போலீஸ் அதிகாரியாக நடித்திருந்தார். இந்நிலையில், நடிகராக மட்டுமின்றி தயாரிப்பாளராகவும் சிபிராஜ் புதிய பயணத்தை தொடங்கியுள்ளார்.

தனது பிறந்தநாளான நேற்று, சிபிராஜ் ‘அண்டர்டாக் ஃபிலிம்ஸ்’ (Underdog Films) என்ற புதிய திரைப்படத் தயாரிப்பு நிறுவனத்தை தொடங்கியுள்ளார். இந்த நிறுவனத்தின் முதல் தயாரிப்பாக ‘புரொடக்ஷன் நம்பர் 1’ திரைப்படம் உருவாகி வருகிறது. ‘ஜீப்ரா’ திரைப்படத்தை இயக்கிய ஈஷ்வர் கார்த்திக், இப்படத்தை இயக்குகிறார். இதில் சிபிராஜே கதாநாயகனாக நடிக்கிறார். படத்தின் படப்பிடிப்பு ஏற்கனவே தொடங்கி விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

இதுகுறித்து சிபிராஜ் கூறுகையில், “சினிமாவை நம்பி புதிய பாதையில் அடியெடுத்து வைத்திருக்கிறேன். சினிமாவுக்கு என்றென்றும் உண்மையாக இருப்பேன். எனது புதுமுயற்சிக்கு ரசிகர்கள் ஆதரவு தர வேண்டும்” என்றார். சிபிராஜ் ஈஷ்வர் கார்த்திக் கூட்டணியில் உருவாகும் இப்படம் குறித்த இதர அறிவிப்புகள் விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.